ச்வேதவர்ணம் க்ருபாமூர்த்திம் பைரவம் குண்டலோஜ்வலம் ।।
கதாகபாலஸம்யுக்தம் குமாரஞ்ச திகம்பரம் ।
பாணம் பாத்ரஞ்ச கட்கம் ச அக்ஷமாலாம் கமண்டலும் ।।
நாகயக்ஞோபவீதஞ்ச தாரிணம் ஸுவிபூஷிதம் ।
ப்ரஹ்மாணீ சக்தி ஸஹிதம் ஹம்ஸாரூடம் ஸுரூபிணம் ।।
ஸர்வாபீஷ்டப்ரதம் நித்யம் அஸிதாங்க பஜாம்யஹம் ।।

104. ASITANGBHAIRAVA DHYANAM

Trinetram varadam santam mundamalavibhushitam l
Svetavarnam krupamurtim bhairav am kundalojvalam ll
Gadakapala samyuktam kumarancha digambaram l
Banam patrancha khadgancha akshamalam kamandalum ll
Nagayagnopavitancha dharinam suvibhushitam l
Brahmanisaktisahitam hamsarudam surupinam ll
Sarvabhistapradam nityam Asitangam bhajamyaham ll

மூன்று கண்களையுடையவரும், வேண்டிய வரங்களை கொடுப்பவரும், சாந்தமான ஸ்வரூபத்தை உடையவரும்,

தலை முண்டங்களால் ஆக்கப்பட்ட மாலையை அணிந்திருப் பவரும், வெண்மையான நிறமுடையவரும், கருணை வடிவம் கொண்டவரும், காதுகளில் அணியப்பெற்ற குண்டலங்களால் மிகவும் ப்ரகாசிப்பவரும், கதை, கபாலம், பாணம், பாத்ரம், கட்கம், ஜபமாலை, கமண்டலு, இவைகளையுடையவரும், திகம்பரனாயும், இளைஞனாகவும், பாம்பைப் பூணூலாக அணிந்து கொண்டு இருப்பவரும், நன்கு அலங்கரிக்கப்பட்டிருப்பவரும், ப்ருஹ்மாணீ என்கிற சக்தியுடன் கூடியவரும், அன்னப் பறவையை வாஹனமாகக்கொண்டவரும், அழகாக இருப்பவரும், வேண்டிய விருப்பமான யாவற்றையும் கொடுப்பவருமான அஸிதாங்க பைரவர் என்னும் பைரவ மூர்த்தியை எப்பொழுதும் வணங்குகிறேன்.

१०५. रुरुभैरवध्यानम्

त्रिणेत्रं वरदं शान्तं कुमारञ्च दिगम्बरम् ।
टङ्कं कृष्णमृगं पात्रं बिभ्राणञ्च कृपाणकम् ॥
माहेश्वर्यायुतं देवं वृषारूढं स्मिताननम् ।
शुद्धस्फटिकसंकाशं नमामि रुरुभैरवम् ॥

ருரு பைரவ தியானம்

த்ரிணேத்ரம் வரதம் சாந்தம் குமாரஞ்ச திகம்பரம் ।
டங்கம் க்ருஷ்ணம்ருகம் பாத்ரம் பிப்ராணஞ்சக்ருபாணகம் ॥
மாகேச்வர்யாயுதம் தேவம் வ்ருஷாரூடம் ஸ்மிதானனம் ।
சுத்தஸ்படிக ஸங்காசம் நமாமி ருருபைரவம் ॥

105. RURU BHAIRAVA DHYANAM

Trinetram varadam santam kumarancha digambaram I
Tankam krushnamrugam patram bibhrananchakrupanakam II
Mahesvaryayutam devam vrusharudam smitananam I
Suddaspharikasankasam namami Rurubhairavam II

மூன்று கண்களையுடையவரும், வேண்டிய வரங்களைக் கொடுப்பவரும், சாந்தமான தோற்றத்தை உடையவரும், இளைஞனாகவும், திகம்பரனாகவும் இருப்பவரும், டங்கம், க்ருஷ்ணம்ருகம் (புள்ளிமான்) பானபாத்ரம், கத்தி இவைகளை வைத்திருப்பவரும், மாஹேச்வரி என்ற சக்தியுடன் கூடியவரும், காளை வாகனத்தின்மேல் வீற்றிருப்பவரும், புன்முறுவல் பூத்த முகத்துடன் கூடியவரும், நிர்மலமான ஸ்படிகம் போன்று வெண்மையான மேனியை உடையவருமான ருருபைரவர் என்ற பைரவ மூர்த்தியை வணங்குகிறேன்.

१०६. क्रोधभैरवध्यानम्

त्रिनेत्रं वरदं शान्तं कुमारञ्च दिगम्बरम् ।
गदां शंखं च चक्रञ्च पानपात्रञ्च धारिणम् ॥
लक्ष्म्या च सहितं वामे गरुडासनसुस्थितम् ।
नीलवर्णं महादेवं वन्दे श्रीक्रोधभैरवम् ॥

106. க்ரோத பைரவ தியானம்

த்ரிணேத்ரம் வரதம் சாந்தம் குமாரஞ்ச திகம்பரம் ।
கதாம் சங்கம்ச சக்ரஞ்ச பாநபாத்ரஞ்ச தாரிணம் ॥
லக்ஷ்ம்யாச ஸஹிதம் வாமே கருடாஸநஸுஸ்த்திதம் ।
நீலவர்ணம் மஹாதேவம் வந்தே ஸ்ரீக்ரோதபைரவம் ॥

106. KRODHA BHAIRAVA DHYANAM

Trinetram varadam santam kumarancha digambaram I
Gadam sankhancha chakrancha panapatrancha dharinam II
Lakshmyachasahitam vame garudasana susthitam I
Nilavarnam mahadevam vande Sri Krodhabhairavam II

மூன்று கண்களையுடையவரும், கதை, சங்கம், சக்ரம், பானபாத்ரம் இவைகளையுடையவரும், வேண்டப்பட்ட

வரங்களைக் கொடுப்பவரும், சாந்தமான தோற்றத்தை உடையவரும், குமாரனாகவும், திகம்பரனாகவும் விளங்குபவரும், இடது பக்கத்தில் இலக்குமியுடன் கூடியவராக கருட வாஹனத்தில் அமர்ந்திருப்பவரும், நீலநிறமான மேனியையுடையவருமான க்ரோதபைரவரை வணங்குகிறேன்.

१०७. उन्मत्तभैरवध्यानम्

त्रिणेत्रं वरदं शान्तं कुमारञ्च दिगम्बरम् ।
हेमवर्णं महादेवं अश्ववाहनसुस्थितम् ॥
खड्गं कपालं मुसलं दधन्तं खेटकं तथा ।
वाराहीशक्ति सहितं वन्दे उन्मत्तभैरवम् ॥

107. உந்மத்த பைரவ தியானம்

த்ரிணேத்ரம் வரதம் சாந்தம் குமாரஞ்ச திகம்பரம் ।
ஹேமவர்ணம் மஹாதேவம் அச்வவாஹன ஸுஸ்த்திதம் ॥
கட்கம் கபாலம் முஸலம் ததந்தம் கேடகம் ததா ।
வாராஹீ சக்தி ஸஹிதம் வந்தே உன்மத்தபைரவம் ॥

107. UNMATA BHAIRAVA DHYANAM

Trinetram varadam santam kumarancha digambaram I
Hemavarnam mahadevam asvavahanasusthitam II
Khadgam kapalam musalam dadhantam khetakam tatha I
Varahi sakti sahitam vande Unmatta bhiravam II

மூன்று கண்களையுடையவரும், வேண்டப்பட்ட வரங்களைக் கொடுப்பவரும், சாந்தமான தோற்றத்தை உடையவரும், குமாரனாகவும், திகம்பரனாகவும் இருப்பவரும், ஸ்வர்ணம் போன்ற மஞ்சள் நிறமான

மேனியையுடையவரும், அச்வவாஹனத்தில் அமர்ந்திருப்ப வரும், கட்கம், கபாலம், உலக்கை, கேடயம் இவைகளை உடையவரும், வாராஹீ சக்தியுடன் கூடியவருமான உன்மத்த பைரவரை வணங்குகிறேன்.

१०८. कपालभैरवध्यानम्

त्रिणेत्रं वरदं शान्तं कुमारञ्च दिगम्बरम् ।
पाशं वज्रं तथा खड्गं पानपात्रञ्च धारिणम् ।।
इन्द्राणीशक्तिसहितं गजवाहनसुस्थितम् ।
कपालभैरवं वन्दे पद्मरागप्रभं शुबम् ।।

108. கபால பைரவ தியானம்

த்ரிணேத்ரம் வரதம் சாந்தம் குமாரஞ்ச திகம்பரம் ।
பாசம் வஜ்ரம் ததா கட்கம் பானபாத்ரஞ்ச தாரிணம் ।।
இந்த்ராணீசக்தி ஸஹிதம் கஜவாஹன ஸுஸ்த்திதம் ।
கபால பைரவம் வந்தே பத்மராகப்ரபம் சுபம் ।।

108. KAPALA BHAIRAVA DHYANAM

Trinetram varadam santam kumarancha digambaram l
Pasam vajram tatha khadgam panapatrancha dharinam ll
Indranisaktisahitam gajavahana susthitam l
Kapalabhairavam vande padmaragaprabham subham ll

மூன்று கண்களையுடையவரும், வேண்டப்பட்ட வரங்களைக் கொடுப்பவரும், சாந்தமான தோற்றத்தை உடையவரும், குமாரனாகவும், திகம்பரனாகவும் இருப்பவரும், பாசக்கயிறு, வஜ்ரம், கத்தி, பானபாத்ரம் இவைகளையுடையவரும் இந்திராணி என்னும் சக்தியுடன் கூடியவரும், யானை வாஹனத்தின்மீது வீற்றிருப்பவரும், பத்மராகம் போன்ற மேனியையுடையவருமான கபால பைரவரை வணங்குகிறேன்.

१०९. भीषणभैरवध्यानम्

त्रिनेत्रं वरदं शान्तं कुमारञ्च दिगम्बरम् ।
खड्गं शूलं कपालञ्च धारिणं मुसलं तथा ॥
चामुण्डाशक्तिसहितं प्रेतवाहनसुस्थितम् ।
रक्तवर्णं महादेवं वन्दे भीषणभैरवम् ॥

109. பீஷண பைரவ தியானம்

த்ரிணேத்ரம் வரதம் சாந்தம் குமாரஞ்ச திகம்பரம் ।
கட்கம் சூலம் கபாலஞ்ச தாரிணம் முஸலம் ததா ॥
சாமுண்டா சக்தி ஸஹிதம் ப்ரேதவாஹன ஸுஸ்த்திதம் ।
ரக்தவர்ணம் மஹாதேவம் வந்தே பீஷணபைரவம் ॥

109. BHISHANA BHAIRAVA DHYANAM

Trinetram varadam santam kumarancha digambaram l
Khadgam sulam kapalancha dharinam musalam tatha ll
Chamundasaktisahitam pretavahana susthitam l
Raktavarnam mahadevam vande Bhishana bhairavam ll

மூன்று கண்களையுடையவரும், வேண்டப்பட்ட வரங்களைக் கொடுப்பவரும், சாந்தமான தோற்றத்தை உடையவரும், குமாரனாகவும், திகம்பரனாகவும் இருப்பவரும், கத்தி, சூலம், கபாலம், உலக்கை இவைகளையுடையவரும், சாமுண்டி என்னும் சக்தியுடன் கூடியவரும், ப்ரேத வாஹனத்தின்மீது அமர்ந்திருப்பவரும், சிவந்த மேனியையுடையவருமான பீஷணபைரவர் என்கிற மஹாதேவனான பைரவரை வணங்குகிறேன்.

११०. चण्डभैरवध्यानम्

त्रिनेत्रं वरदं शान्तं कुमारञ्च दिगम्बरम् ।
धनुर्बाणं च बिभ्राणं खड्गं पात्रं तथैव च ॥
कौमारीशक्तिसहितं शिखिवाहनसंस्थितम् ।
गौरवर्णयुतं देवं वन्दे श्रीचण्डभैरवम् ॥

110. சண்ட பைரவ தியானம்

த்ரிணேத்ரம் வரதம் சாந்தம் குமாரஞ்ச திகம்பரம் ।
தனுர்பாணஞ்ச பிப்ராணம் கட்கம் பாத்ரம் ததைவச ॥
கௌமாரீசக்தி ஸஹிதம் சிகிவாஹன ஸம்ஸ்த்திதம் ।
கௌரவர்ணயுதம் தேவம் வந்தே ஸ்ரீசண்டபைரவம் ॥

110. CHANDA BHAIRAVA DHYANAM

Trinetram varadam santam kumarancha digambaram l
Dhanurbanancha bibhranam khadgam patram tathaivacha l
Kaumarisaktisahitam sikhivahana samusthitam l
Gauravarnayutam devam vande Sri Chandabhairavam ll

மூன்று கண்களையுடையவரும், வேண்டப்பட்ட வரங்களைக் கொடுப்பவரும், சாந்தமான தோற்றத்தை உடையவரும், இளைஞனாகவும், திகம்பரனாகவும் இருப்பவரும், வில், அம்பு, கத்தி, பானபாத்ரம் இவைகளையுடையவரும், கௌமாரீ என்னும் சக்தியை உடையவரும், மயிலை வாஹனமாகக்கொண்டவரும், வெண்மையான நிறமுடையவருமான சண்டபைரவர் என்கிற பைரவரை வணங்குகிறேன்.

१११. संहारभैरवध्यानम्

दशबाहुं त्रिणेत्रं च सर्पयज्ञोपवीतिनम् ।
दंष्ट्राकरालवदनं अष्टैश्वर्यप्रदायकम् ॥
दिगम्बरं कुमारञ्च सिंहवाहन संस्थितम् ।
शूलं डमरुकं शङ्खं गदां चक्रञ्च धारिणम् ॥
खड्गं पात्रं च खट्वाङ्गं पाशमङ्कुशमेव च ।
दैत्यशीर्षकपालोग्रबृहन्मालाधरं वटुम् ॥
उग्ररूपं मदोन्मत्तं बाडवानलभैरवम् ।
चण्डिकाशक्ति सहितं ध्यायेत्संहारभैरवम् ॥

111. ஸம்ஹார பைரவ தியானம்

தசபாஹும் த்ரிணேத்ரம் சஸர்ப்பயக்ஞோபவீதினம் ।
தம்ஷ்ட்ராகராள வதனம் அஷ்டைச்வர்யப்ரதாயகம் ॥
திகம்பரம் குமாரஞ்ச ஸிம்வாஹனஸம்ஸ்த்திதம் ।
சூலம் டமருகம் சங்கம் கதாம் சக்ரஞ்சதாரிணம் ॥
கட்கம் பாத்ரம் கட்வாங்கம் பாசமங்குசமேவ ச ।
தைத்யசீர்ஷகபாலோக்ர ப்ருஹன்மாலாதரம் வடும் ॥
உக்ரரூபம் மதோந்மத்தம் பாடவானலபைரவம் ।
சண்டிகாசக்தி ஸஹிதம் த்யாயேத் ஸம்ஹாரபைரவம் ॥

111. SAMHARABHIRAVA DHYANAM

Dasabahum trinetrm cha sarpayagnopavitinam l
Damshtrakaralavadanam ashtaisvarya pradayakam ll
Digambaram kumarancha simhavahanasamsthitam l
Sulam damarukam sankham gadam chakrancha dharinam ll
Khadgam patram cha katvangam pasamankusameva cha l
Daityasirshakapalogra bruhanmaladharam vatum ll
Ugrarupam madonmattam badavanlabhairavam l
Chadikasaktisahitam dhyayet samharabhairavam ll

பத்து கைகளையும், மூன்று கண்களையும் உடையவரும், பாம்பைப் பூணூலாக அணிந்து கொண்டிருப்பவரும் கோரைப்பற்களால் பயங்கரமான முகத்தையுடையவரும், எட்டுவிதமான ஐச்வர்யங்களையும் கொடுப்பவரும் திகம்பரனாகவும் குமாரனாகவும் இருப்பவரும், ஸிம்ஹவாஹனத்திலமர்ந்திருப்பவரும். சூலம். டமருகம், சங்கம். கதை, சக்ரம், கத்தி, பானபாத்ரம், கட்வாங்கம், பாசம், அங்குசம் இவைகளைக் கைகளில் வைத்திருப்பவரும், அரக்கர்களது மண்டை ஓடுகளால் செய்யப்பட்ட பயங்கரமான பெரிய மாலையை அணிந்திருப்பவரும், வடுவாகவும், பயங்கரமான தோற்றமுடையவராகவும், மதத்தினால் உன்மத்தராகவும், பாடவாக்னிபோல் மிகவும் பயங்கரமாக இருப்பவரும், சண்டிகா சக்தியுடன் இருப்பவருமான ஸம்ஹாரபைரவரை தியானம் செய்யவேண்டும்.

११२. ऊर्ध्ववटुकभैरवध्यानम्

त्र्यक्षं दशभुजं रौद्रं ऊर्ध्वकेशं सुदंष्ट्रकम् ।
रौद्रदृष्टिञ्च कृष्णाभं विलसच्छशिशेखरम् ।।
प्रभामण्डलमध्यस्थं नागयज्ञोपवीतिनम् ।
कर्णयोर्भद्रसंयुक्तं तीक्ष्णतोमरसंयुतम् ।।
शूलं डमरुकं खड्गं अङ्कुशं चाभयं तथा ।
कपालं खेटकं नागं पाशं दण्डञ्च धारिणम् ।।
नानादिव्याम्बरैर्युक्तं किंकिणीवरसंयुतम् ।
पद्मपीठस्तितं वन्दे ऊर्ध्ववटुकभैरवम् ।।

112. ஊர்த்வ வடுக பைரவ தியானம்

த்ரயக்ஷம் தசபுஜம் ரௌத்ரம் ஊர்த்வகேசம் ஸுதம்ஷ்ட்ரகம் ।
ரௌத்ரத்ருஷ்டிஞ்ச க்ருஷ்ணாபம் விலஸச்சசிசேகரம் ॥
ப்ரபாமண்டல மத்யஸ்த்தம் நாகயக்ஞோபவீதினம் ।
கர்ணயோர்பத்ரஸம்யுக்தம் தீக்ஷ்ணதோமரஸம்யுதம் ॥
சூலம் டமருகம் கட்கம் அங்குசம் சாபயம் ததா ।
கபாலம் கேடகம் நாகம் பாசம் தண்டஞ்சதாரிணம் ॥
நாநாதிவ்யாம்பரைர்யுக்தம் கிங்கிணீவரஸம்யுதம் ।
பத்மபீடஸ்த்திதம் வந்தே ஊர்த்வவடுகபைரவம் ॥

112. URDHVAVATUKABHAIRAVA DHYANAM

Tryaksham dasabhujam raudram urdhvakesam sudamshtrakam I
Raudradrushtincha krushnabhamvilasacchasisekaram II
Prabhamandalamadhyastham nagayagnopavitinam I
Karnayorbhadrasamyktam tikshnatomarasamyutam II
Sulam damarukam khadgam ankusanchabhayam tatha II
Kapalam khetakam nagam pasam dandancha dharinam I
Nanadivyaambarairyuktam kinkinivarasamyutam I
Padmapithasthitam vande Urdhvavatukabhairavam II

மூன்று கண்களையும், பத்து கைகளையும் உடையவரும், மிகவும் பயங்கரமான தோற்றமுடையவரும், உயரத் தூக்கிக் கட்டப்பட்ட சிகையையுடையவரும், அழகான கோரைப்பற்களையுடையவரும், கொடூரமான பார்வையையுடையவரும், கருமையான மேனியை உடையவரும், சந்திரனைத் தலையில் வைத்துக் கொண்டிருப்பதால் ப்ரகாசிப்பவராக இருப்பவரும், ஒளி மண்டலத்தினால் சூழப்பட்டவரும், பாம்பைப் பூணூலாக அணிந்திருப்பவரும், காதுகளில் பத்ரகுண்டலங்களை அணிந்திருப்பவரும், கூர்மையான தோமரம்(இரும்புத்தடி) என்னும் ஆயுதத்தையுடையவரும் சூலம், டமருகம் (சிறிய

டமாரம், கத்தி, அங்குசம், கபாலம், கேடகம், பாம்பு, பாசம், தண்டம், அபயமுத்திரை, இவைகளையுடையவரும், சிறந்த ஆடைகளால் அலங்கரிக்கப்பட்டவரும், அழகான கிங்கிணி மாலையை அணிந்திருப்பவரும், பத்மபீடத்தில் அமர்ந்திருப்பவருமான ஊர்த்வ வடுக பைரவரை வணங்குகிறேன்.

११३. स्वयंभुनाथभैरवध्यानम्

एकेन शूलमितरेण शिरःकपालं
अन्येन नागं अपरेण वीणाम् ।
आदाय यश्चरति भैक्षमनेकरूपं
स्वायंभुनाथ भगवान्परमेश्वरोऽसौ ॥

113. ஸ்வாயம்புநாத பைரவ தியானம்

ஏகேநசூலமிதரேண சிரஹ்கபாலம்
அந்யேந நாகம் அபரேண வீணாம் ।
ஆதாயயச்சரதி பைக்ஷமநேகரூபம்
ஸ்வாயம்புநாதபகவாந் பரமேச்வரோஸௌ ॥

113. SWAYAMBUNATHABAIRAVA DHYANAM

Yekena sulamitarena sirahkapalam
Anyena nagam aparena vinam I
Adayayascharati bhaikshamanekarupam
svayambunatha bhaghavan paramesvarosaw II

ஒரு கையில் சூலத்தையும், ஒரு கையில் மண்டையோட்டையும், ஒரு கையில் பாம்பையும், மற்றொரு கையில் வீணையையும் வைத்திருப்பவரும் பலவிதமான உருவங்களில் தோன்றி பிக்ஷாடனம் செய்பவரும், பரமேச்வரனின் அவதாரமான ஸ்வாயம்புநாத பைரவர் எவரோ அவரை வணங்குகிறேன்.

११४. बलिपीठध्यानम्

पञ्चशीर्षं दशाक्षं च दशबाहुं दशश्रवम् ।
नीरदाभं बलिभुजं बलिपीठमहं भजे ॥

114. பலிபீட தியானம்

பஞ்சசீர்ஷம் தசாக்ஷம் சதசபாஹும் தசச்ரவம்।
நீரதாபம் பலிபுஜம் பலிபீடமஹம் பஜே ॥

114. BALIPITA DHYANAM

Panchasirsham dasakshancha dasabahum dasasravam I
Niradabham balibhujam balipithamaham bhaje II

ஐந்து தலைகளையும், பத்து கண்களையும் பத்து காதுகளையுமுடையவரும், நீருண்ட மேகம்போல் கருமை நிறங்கொண்டவரும், பலியை சாப்பிடுகின்றவருமான பலிபீடத்தை வணங்குகிறேன்.

११५. क्षेत्रपालध्यानम्

आशांबरं त्रिणयनमूर्ध्वकेशं चतुर्भुजम् ।
ढक्काशूलकपालोग्रं वन्देऽहं क्षेत्रपालकम् ॥

114. க்ஷேத்ரபால தியானம்

ஆசாம்பரம் த்ரிணயனம் ஊர்த்வகேசம் சதுர்புஜம்।
டக்காசூலகபாலோக்ரம் வந்தேஹம் க்ஷேத்ரபாலகம் ॥

115. KSHETRAPALA DHYANAM

Asambaram trinayanam Urdhvakesam chaturbhujam I
Dhakkasulkapalogram vandeham kshetrapalakam II

திகம்பரராயும் மூன்று கண்களையும், நான்கு கைகளையுமுடையவரும், உயரத்தூக்கிக் கட்டப்பட்ட

கூந்தலையுடையவராயும், உடுக்கை, சூலம், கபாலம் இவைகளையுடையவராகவும் உக்ரமான உருவத்தை உடையவராயுமிருக்கிற க்ஷேத்ரபாலக ஸ்வாமியை வணங்குகிறேன்.

११६. अप्पर् स्वामिगल् ध्यानम्

बद्धाञ्जलिकराम्भोजं भूतिरुद्राक्षधारिणम् ।
वृद्धाकृतिं प्रशान्तञ्च तृणच्छेत्रीकरं शुभम् ॥
शिवमन्दिरसंशुद्धिकरं (अ)पर्याप्तवाससम् ।
वागीशं द्राविडाचार्यं मानसे भावये सदा ॥

116. அப்பரடிகள் தியானம்

பத்தாஞ்சலிகராம்போஜம் பூதிருத்ராக்ஷதாரிணம் ।
வ்ருத்தாக்ருதிம் ப்ரசாந்தஞ்சத்ருணச்சேத்ரீகரம் சுபம் ॥
சிவமந்திரஸம்சுத்திகரம் (அ)பர்யாப்த வாஸஸம் ।
வாகீசம் த்ராவிடாசார்யம் மானஸே பாவயே ஸதா ॥

116. APPARADIGAL DHYANAM

Baddhanjali karambhojam bhutirudrakshadharinam I
Vruddhakrutim prasantancha trunacchetrikaram subham II
Sivamandira samsuddhikaram(a)paryaptavasasam I
Vagisam dravidacharyam manase bhavaye sada II

கூப்பிய கைகளையுடையவரும், விபூதி ருத்ராக்ஷம் இவைகளையணிந்திருப்பவரும், கிழத்தன்மை வாய்ந்த சரீரத்தையுடையவரும், சாந்தஸ்வரூபியாயும், புற்களை அகற்றும் உழவாரப்படையை கையில் வைத்திருப்பவரும், நன்மையைச் செய்பவரும், சிவாலயத்தை பரிசுத்தப் படுத்துவதற்கே தன்னை அர்ப்பணித்து கொண்டவரும், முழங்காலளவு மட்டில் ஆடையை உடுத்தி இருப்பவரும், நல்ல பேச்சாளரும் (பாக்களை இயற்றுபவரும்)

த்ராவிடமொழி வல்லுநரும், த்ராவிடாசார்யருமான அப்பரடிகளை எப்பொழுதும் வணங்குகிறேன்.

११७. सुन्दरर् स्वामिगल् ध्यानम्

किरीटमकुटोपेतं कर्णभूषादि भूषितम् ।
पञ्चकच्छधृतक्षौममुत्तरीयधरं शुभम् ॥
दक्षिणे पुष्पगुच्छञ्च करे वामे च वेत्रकम् ।
धरन्तं द्राविडाचार्यं सुन्दरं नौमि शाम्भवम् ॥

117. ஸுந்தரர் தியானம்

கிரீடமகுடோபேதம் கர்ணபூஷாதி பூஷிதம்।
பஞ்சகச்சத்ருதக்ஷௌமமுத்தரீயதரம் சுபம் ॥
தக்ஷிணேபுஷ்ப குச்சம்சகரேவாமேச வேத்ரகம்।
தரந்தம் த்ராவிடாசார்யம் சுந்தரம் நௌமிசாம்பவம் ॥

117. SUNDARAR DHYANAM

Kritamakutopetam karnabhushadi bhushitam I
Panchakacchadhrutaksahuma murtariyadharam subham II
Dakshine pushpagucchancha kare vame cha vertrakam I
Dharantam dravidacharyam Sundaram naumi sambhavam II

கிரீட மகுடத்தைத் தரித்திருப்பவரும் காதுகளில் குண்டலங்களையும், மார்பில் ஹாரம் முதலிய ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவரும், வெண் பட்டாடையை பஞ்சகச்சமாகவும் உத்தரீயமாகவும் உடுத்தியிருப்பவரும், நன்மையைச் செய்பவரும், வலது கையில் மலர் செண்டையும் இடது கையில் பிரம்பையும் உடையவரும், த்ராவிடமொழி வல்லுநரும், த்ராவிடாசார்யரும் சிவபக்தருமான சுந்தரமூர்த்தி ஸ்வாமிகளை வணங்குகிறேன்.

११८. सम्बन्दर् (स्वामिगल्) ध्यानम्

पुरश्चूडामनोज्ञाङ्गं बालं हारादिभूषितम् ।
दिव्याम्बरधरं स्वर्णतालवाद्यकरं शुभम् ॥
ईषदुत्थितदक्षांघ्रिं क्वणन्नूपुरमण्डितम् ।
वन्देऽहं द्राविडाचार्यं ज्ञानसम्बन्धमन्वहम् ॥

ஸம்பந்தர் தியானம்

புரச்சூடாமநோக்ஞாங்கம் பாலம் ஹாராதிபூஷிதம் ।
திவ்யாம்பரதரம் ஸ்வர்ணதாளவாத்யகரம் சுபம் ॥
ஈஷதுத்தித தக்ஷாங்க்ரிம் க்வணந்நூபுரமண்டிதம் ।
வந்தேஹம் த்ராவிடாசார்யம் ஞாநஸம்பந்தமந்வஹம் ॥

118. SAMBANDAR DHYANAM

Purachuda manognangam balam haradibhushitam I
Divyambaradharam swarnatala vadyakaram subham II
Ishadutthita dakshanghrim kvanannupuramanditam I
Vandeham dravidacharyam gnanasambanda manvaham II

தலையின் முன்புறத்தில் விளங்கும் அழகான கொண்டையினால் சோபிக்கின்ற முகத்தையும் சரீரத்தையும் உடையவரும், குழந்தைவடிவமாக இருப்பவரும், முத்துமாலை முதலான ஆபரணங்களையுடையவரும், அழகான ஆடையை உடுத்தியிருப்பவரும், (பரமேச்வரனால் அளிக்கப்பெற்ற) ஸ்வர்ணத்தாலான தாளத்தைக் கையில் வைத்திருப்பவரும், நன்மையைச் செய்பவரும், சிறிது தூக்கினாற்போல் வைத்துக்கொள்ளப்பட்ட வலது முழங்காலையுடையவரும், ஒலிக்கின்ற நூபுரத்தை கால்களில் அணிந்திருப்பவரும் த்ராவிடமொழி வல்லுநரும் த்ராவிட குருவான ஞானஸம்பந்தப்பெருமானை அநுதினமும் வணங்குகிறேன்.

११९. माणिक्कवाचकध्यानम्

दक्षिणे जपमालाञ्च करे वामे च तालकम् ।
पत्रं धरन्तं स्थविरं भूतिरुद्राक्षधारिणम् ॥
स्वच्छश्वेताम्बरं शान्तं शिवानन्दरसप्रदम् ।
माणिक्क(क्य)वाचकं वन्दे द्राविडाचार्यमन्वहम् ॥

119. மாணிக்கவாசகர் தியானம்

தக்ஷிணே ஜபமாலாஞ்சகரே வாமே சதாளகம்।
பத்ரம் தரந்தம் ஸ்த்தவிரம் பூதிருத்ராக்ஷதாரிணம்॥
ஸ்வச்சச்வேதாம்பரம் சாந்தம் சிவாநந்தரஸப்ரதம்।
மாணிக்க(க்ய)வாசகம் வந்தே த்ராவிடாசார்யமந்வஹம்॥

119. MANIKKAVACHAKAR DHYANAM

Dakshine japamalancha kare vame cha talakam l
Patram dharantam sthaviram bhutirudraksha dharinam ll
Svacchasvetammbaram santam sivananandarasapradam l
Manikkavachakam vande dravidacharyamanvaham ll

வலது கையில் ஜபமாலை, இடது கையில் பனை ஓலையாலான சுவடி, இவைகளையுடையவரும், கிழவடிவமுடையவரும், விபூதி ருத்ராக்ஷம் இவைகளைத் தரித்திருப்பவரும், நிர்மலமானதும் மிக்க வெண்மையானது மான ஆடையை உடுத்தியிருப்பவரும், சாந்த ஸ்வரூப முடையவராகவும், (திருவாசகம் முதலான சிறந்த நூல்களை இயற்றி) சிவாநந்தரஸத்தை பக்தர்களுக்கு அளித்தவரும் த்ராவிட மொழி வல்லுநரும் ஆசார்யருமான மாணிக்கவாசகரை தினமும் வணங்குகிறேன்.

மூ - 20

१२०. शास्ताध्यानम्

युवानं सुन्दरं सौम्यं पुष्पगुच्छकरं प्रभुम् ।
योगवेष्टितदिव्याङ्गं सुखपद्मासनस्थितम् ।।
पूर्णाञ्च पुष्कलां देवीं कृत्वा दक्षिणवामयोः ।
पार्श्वयोर्भ्राजमानं तं शास्तारं नौमि भूतये ।।

120. சாஸ்தா தியானம்

யுவானம் ஸுந்தரம் ஸௌம்யம் புஷ்பகுச்சகரம் ப்ரபும் ।
யோகவேஷ்டிததிவ்யாங்கம் ஸுகபத்மாஸநஸ்த்திதம் ।।
பூர்ணாஞ்ச புஷ்கலாம் தேவீம் க்ருத்வா தக்ஷிணவாமயோ: ।
பார்ச்வயோர் ப்ராஜமானம் தம் சாஸ்தாரம் நௌமி பூதயே ।।

120. SASTA DHYANAM

Yuvanam sundaram saumyam pushpagucchakaram prabhum l
Yogaveshtitadivyangam sukhapadmasanasthitam ll
Purnancha puskalam devim krutva dakshinavamayoh l
Parsvayorbhrajamanam tam sastaram naumi bhutaye ll

யுவாவாகவும், அழகாகவும், புன்முறுவலுடனும் கூடியிருப்பவரும், கையில் புஷ்பக்கொத்தை வைத்திருப்பவரும், யோக வேஷ்டியினால் சுற்றப்பட்ட சரீரத்தையுடையவரும், ஸுகமாக பத்மாஸனத்தில் வீற்றிருப்பவரும், வலது பக்கத்தில் பூர்ணாம்பிகையையும், இடது பக்கத்தில் புஷ்கலாம்பிகையையும் வைத்துக்கொண்டு விளங்குகிறவருமான ப்ரபுவான சாஸ்தாவை க்ஷேமத்தின் (ஐச்வர்யத்தின்) பொருட்டு வணங்குகிறேன்.

१२१. वीरभद्रध्यानम्

श्वेताङ्गं शेषभूषाङ्गं खड्गवीणाधरं शुभम् ।
धृतकृष्णामृगं वीरं शार्दूलाजिनवासम् ॥
अर्धोन्मीलितनेत्रं तं त्रिणेत्रं च जटाधरम् ।
सुगन्धिपुष्पमालं श्रीवीरभद्रं नमाम्यहम् ॥

121. வீரபத்ர தியானம்

ச்வேதாங்கம் சேஷபூஷாங்கம் கட்கவீணாதரம் சுபம் ।
த்ருதக்ருஷ்ணம்ருகம் விரம் சார்தூலாஜி நவாஸஸம் ॥
அர்த்தோந்மீலித நேத்ரம் தம் த்ரிணேத்ரம் சஜடாதரம் ।
ஸுகந்தி புஷ்பமாலம் ஸ்ரீவீரபத்ரம் நமாம்யஹம் ॥

121. VEERABHADRA DHYANAM

Sevtangam seshabhushangam khadga veenadharam subham l
Dhrutakrishnamrugam veeram sardlajinavasasam ll
Ardhonmilita netram tam trinetrancha jatadharam l
Sugandhipushpamalam Sri Veerabhadram namamyaham ll

வெண்மை நிறமுடைய மேனியை உடையவரும், ஸர்ப்பங்களால் அலங்கரிக்கப்பட்ட சரீரத்தை உடையவரும், புள்ளிமான்களைக் கைகளில் உடையவரும், புலித்தோலை உடுத்திக் கொண்டிருப்பவரும், பாதி திறந்திருக்கும்படியான கண்களை உடையவரும், முக்கண்ணனும், ஜடையை உடையவரும், வாசனை பொருந்திய மலர்மாலையை அணிந்திருப்பவருமான வீரபத்ர ஸ்வாமியை வணங்குகிறேன்.

१२२. वीरभद्रध्यानम् (२)

षण्णेत्रं त्रिमुखं भीमं कालमेघसमप्रभम् ।
उदर्चिज्वलनं नीलगात्रं षड्बाहुशोभितम् ।।
पानपात्रासिशूलेषुचापखड्गधरं शुभम् ।
भूतप्रेतादिदमनं दुष्टारातिविनाशनम् ।।
मेरुवासं महेशं तं वीरभद्रं नमाम्यहम् ।।

122. வீரபத்ர தியானம் (2)

ஷண்ணேத்ரம் த்ரிமுகம் பீமம் காலமேகஸமப்ரபம் ।
உதரசிஜ்வலனம் நீலகாத்ரம் ஷட்பாஹு சோபிதம் ॥
பானபாத்ராஸிசூலேஷு சாப கட்கதரம் சுபம் ।
பூதப்ரேதாதி தமனம் துஷ்டாராதி விநாசனம் ॥
மேருவாஸம் மஹேசம் தம் வீரபத்ரம் நமாம்யஹம் ॥

122. VEERABHADRA DHYANAM

Shannetram trimukam bhimam kalamegha samaprabham I
Udarchijvalanam nilagatram shadbahusobhitam II
Pananpatrasisulehuchapakhadgadharam suubham I
Bhutapretadidamanam dushtarativinasanam II
Meruvasam mahesam tam Virabhadram namamyaham II

மூன்று முகங்களையும், ஆறு கண்களையும் உடையவரும், பயங்கரமான தோற்றத்தையுடையவரும், காளமேகம் போன்று கருமை நிறம் கொண்டவரும், மேல் நோக்கி செல்கின்ற கிரணங்களையுடைய அக்னியை சிகையாக உடையவரும், நீலநிறமான (கருமை) சரீரத்தை உடையவரும், ஆறு கைகளையுடையவரும், பானபாத்ரம், கத்தி, சூலம், வில்லு, அம்பு இவைகளையுடைவரும், நன்மையைச் செய்கின்றவரும், பூதகணங்கள், ப்ரேதங்கள் (இறந்தோர் ஆவி) இவைகள் முதலானவைகளை அடக்குபவரும் கொடிய சத்ருவை அழிப்பவரும், மேரு மலையில் வசிப்பவருமான வீரபத்ரரை வணங்குகிறேன்.

नवाग्निध्यानम्

१२३. शिवाग्निध्यानम्

सप्तार्चिषं त्रिणेत्रञ्च पञ्चास्यं दशहस्तकम् ।
पद्मासनसमासीनं [1]त्रिधाबद्धं त्रिपादकम् ॥
शूलं वज्रं च खड्गञ्च शक्तिं तूणीञ्च दक्षिणे ।
गदादण्डौ च पाशञ्च पद्मं चक्रं च वामके ॥
ऊर्ध्वगाश्च त्रिजिह्वाश्च शेषाः प्रागादि संमुखाः ।
स्वधास्वाहासमेतश्रीशिवाग्निशिवकुण्डनः ॥

123. சிவாக்னி தியானம்

*ஸப்தார்சிஷம் த்ரிணேத்ரஞ்ச பஞ்சாஸ்யம் தசஹஸ்தகம் ।
பத்மாஸன ஸமாஸீனம் த்ரிதாபத்தம் த்ரிபாதகம் ॥
சூலம் வஜ்ரம் சகட்கம் சசக்திம் தூணீஞ்சதக்ஷிணே ।
கதாதண்டௌ சபாசஞ்ச பத்மம் சக்ரம் சவாமகே ॥
ஊர்த்வகாச்சத்ரி ஜிஹ்வாச்ச சேஷா: ப்ரகாதிஸம்முகா: ।
ஸ்வதாஸ்வாஹாஸமேதச்ச்ரீ சிவாக்நி சிவகுண்டக: ॥*

123. SIVAGNI DHYANAM

Saptarchisham trinetramcha panchassyam dasahastakam I
Padmasanasamasinam tridhapaddham tripadakam II
Sulam vajrancha khadgancha saktim tunimcha dakshine I
Gadadandau cha pasancha padmam chakram cha vamake II
Urdvagascha trijihvascha seshah pragadisammukah I
Swadhaswahasametas Srisivagni sivakundagaha II

ஏழு ஜ்வாலைகள், மூன்று கண்கள், ஐந்து முகங்கள், பத்து கைகள் இவைகளை உடையவரும், பத்மாஸனத்தில்

1. வேதத்தில் அக்னிக்கு - ஜ்வாலைகள், மூன்று கட்டுகள், மூன்று கால்கள் என்று கூறப்பட்டுள்ளது.

வீற்றிருப்பவரும், மூன்று கட்டுகளையுடையவரும், மூன்று கால்களையுடையவரும், வலது கைகளில் சூலம், வஜ்ராயுதம், கத்தி, சக்தி, தூணீரம், (அம்புராத்தூணி) என்னும் ஆயுதங்களைப் பெற்றிருப்பவரும், இடது கைகளில் கதை, தண்டம், பாசம், பத்மம், சக்ரம் என்னும் ஆயுதங்களைப் பெற்றிருப்பவரும், மேல்நோக்கிச் செல்கின்ற மூன்று நாக்குகளையும் (ஜ்வாலைகளை) கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு திக்குகள் நோக்கிச் செல்கின்ற நான்கு நாக்குகளையும் (ஜ்வாலைகளை) உடையவரும், ஸ்வதா, ஸ்வாஹா என்னும் இரு மனைவிகளையுடையவருமான சிவாக்னியை சிவ குண்டத்தில் தியானம் செய்யவேண்டும்.

१२४. शिवाग्निध्यानम् (२)

पञ्चवक्त्रं चतुर्भुजं लम्बकूर्चं ब्रह्ममूर्तिम् ।
जटामण्डलमण्डितं पद्मासनस्थमसितम् ।।
स्रक्कमण्डलुदण्डाक्षमालायुतकराम्बुजम् ।
सर्वेष्टदं हविर्भुजं तं शिवाग्निमावाहयेत् ।।

124. சிவாக்னி தியானம்

பஞ்சவக்த்ரம் சதுர்புஜம் லம்பகூர்ச்சம் ப்ருஹ்மமூர்த்திம் ।
ஜடாமண்டல மண்டிதம் பத்மாஸனஸ்தமஸிதம் ॥
ஸ்ரக்கமண்டலுதண்டாக்ஷமாலாயுதகராம்புஜம் ।
ஸர்வேஷ்டதம் ஹவிர்புஜம் தம் சிவாக்னிமாவாஹயேத் ॥

124. SIVAGNI DHYANAM

Panchavaktram chaturbhujam lambakurcham brhmamurtim I
Jatamandala manditam padmasanasthamasitam II
Srakkamandaludandakshamalayutakarambujam I
Sarveshtadam havirbhujam tam Sivagni mavahayet II

ஐந்து முகங்கள், நான்கு கைகள், தொங்கும் தாடி இவைகளையுடையவரும், பிரமனின் (பிராமண) உருவம் கொண்டவரும், பரந்தஜடையை உடையவரும், பத்மாஸனத்தில் வீற்றிருப்பவரும், கருமையான நிறம் கொண்டவரும், ஸ்ரக்கமண்டலு, தண்டம், ஜபமாலை இவைகளைக் கைகளில் பெற்றிருப்பவரும், வேண்டிய வரங்களைக் கொடுப்பவரும், யாகங்களில் ஹோமம் செய்யப்பட்ட ஹவிஸை உண்பவருமான சிவாக்னியை ஆவாஹனம் செய்யவேண்டும்.

१२५. सामाग्निध्यानम्

द्विमुखं वेदशृङ्गञ्च वराभयकरान्वितम् ।
शक्तिखेटसमायुक्तं विन्यसेदीशकुण्डके ॥

125. ஸாமாக்னி தியானம்

திவிமுகம் வேதச்ருங்கம் சவராபயகரான்விதம்।
சக்திகேட ஸமாயுக்தம் விந்யஸேத் ஈசகுண்டகே॥

125. SAMAGNI DHYANAM

Dvimukham vedasrungam cha varabhaya karanvitam l
Sakti khetasamayuktam vinyasedisakundake ll

இரண்டு முகங்களையுடையவரும், வேதங்களை கொம்புகளாகக் கொண்டவரும், வரத முத்திரை, அபயமுத்திரை இவைகளைக் கைகளில் கொண்டவரும், சக்த்யாயுதம், கேடயம் இவைகளையுடையவருமான ஸாமாக்னி தேவனை ஈச குண்டத்தில் ஆவாஹனம் செய்யவேண்டும்.

१२६. केवलाग्निध्यानम्

द्विनेत्रं द्विभुजञ्चैव वरदाभयसंयुतम् ।
शुक्लवस्त्रसमायुक्तं श्वेतरक्तसमान्वितम् ॥
सर्वालङ्कारसंयुक्तं पङ्कजासनसंस्थितम् ।
केवलाग्निविधिं ध्यात्वा कुण्डमध्ये ततोद्धरेत् ॥

126. கேவலாக்னி தியானம்

*த்விநேத்ரம் த்விபுஜஞ்சைவ வரதாபயஸமந்விதம் ।
சுக்லவஸ்த்ரஸமாயுக்தம் ச்வேதரக்தஸமந்விதம் ॥
ஸர்வாலங்காரஸம்யுக்தம் பங்கஜாஸநஸம்ஸ்திதம் ।
கேவலாக்நிவிதம் த்யாத்வா குண்மத்யே ததோத்தரே ॥*

126. KEVALAGNI DHYANAM

Dvinetram dvibhujanchaiva varadabhaya samyutam l
Sulavastra samayuktam svetarakta samanvitam ll
Sarvanlankara samyuktam pankajasanasamstitam l
Kevalagnividhim dhyatva kundamadhye tatodharet ll

இரண்டு கண்கள், இரண்டு கைகள் இவைகளை உடையவரும், வரதமுத்திரை, அபயமுத்திரை இவைகளைப் பெற்றிருப்பவரும், வெண்மையான வஸ்த்திரத்தை உடுத்தி இருப்பவரும், வெண்சிவப்பு நிறங்கொண்ட மேனியை உடையவரும், நன்கு அலங்கரிக்கப்பட்டவரும், பத்மாஸநத்தில் வீற்றிருப்பவருமான கேவலாக்னியை தியானம் செய்து குண்டமத்தியில் (நடுவில் உள்ள குண்டத்தில்) ஆவாஹனம் செய்யவேண்டும்.

१२७. बालाग्निध्यानम्

द्विमुखं चैकहृदयं चतुःश्रोत्रं द्विनासिकम् ।
चतुःशृङ्गं वृषारूढं बालादित्यसमप्रभम् ॥
स्रुक्स्रुवौचाक्षमालां च शक्तिर्दक्षिणपार्श्वके ।
तोमरं व्यजनं चैव घृतपात्रं तु वामके ॥
बालाग्निरूपमेवं तु विन्यसेत् वामकुण्डके ॥

127. பாலாக்னி தியானம்

த்விமுகம் சைகஹ்ருதயம் சதுச்ச்ரோத்ரம் த்விநாஸிகம்।
சதுச்ச்ருங்கம் வ்ருஷாரூடம் பாலாதித்ய ஸமப்ரபம் ॥
ஸ்ருக்ஸ்ருவௌசாக்ஷமாலாம் சசக்திர் தக்ஷிணபார்ச்வகே।
தோமரம் வ்யஜனம் சைவ க்ருதபாத்ரம் து வாமகே॥
பாலாக்நிரூபமேவந்து விந்யஸேத் வாமகுண்டகே॥

127. BALAGNI DHYANAM

Dvimukham chaikahrudayam chatussrotram dvinasikam l
Chatussrungam vrusharudham baladitya samaprabham ll
Sraksravau chakshamalam cha saktitrdakshina parsvake l
Tomaram vyajanam chaiva ghrutapatrantu vamake ll
Balagnirupamevam tu vinyaset vamakundake ll

இரண்டு முகம், ஒரு மார்பு, நான்கு கொம்புகளை உடையவரும், இளஞ்சூரியனைப் போன்ற நிறம் உடையவரும், ஸ்ருக், ஸ்ருவம், ஜபமாலை சக்தி இவைகளை வலது புறமும், தோமரம், விசிறி, நெய் பாத்திரம் இவைகளை இடது புறமும், பெற்றிருப்பவரும், வ்ருஷப வாகனத்தில் வீற்றிருப்பவருமான பாலாக்னியை ப்ரதானாக்னிக்கு இடது புறமிருக்கும் குண்டத்தில் ஆவாஹனம் செய்யவேண்டும்.

१२८. प्रधानाग्निध्यानम्

एकाननं जटाजूटं त्रिणेत्रञ्च चतुर्भुजम् ।
त्रिशूलं परशुंचैव वरदञ्चाभयं करे ।।
वृषारूढं च श्वेताङ्गं नानाभरण भूषितम् ।
प्रधानाग्नि यजेत्प्राज्ञः वह्निरूपमुमापतिम् ।।

128. பிரதானாக்னி தியானம்

ஏகானனம்ஜடாஜூடம்த்ரிணேத்ரஞ்சசதுர்புஜம்।
த்ரிசூலம் பரசுஞ்சைவ வரதஞ்சாபயம்கரே ।।
வ்ருஷாரூடம் சச்வேதாங்கம் நாநாபரணபூஷிதம்।
ப்ரதானாக்னிம்யஜேத்ப்ராக்ஞ: வஹ்நிரூபமுமாபதிம்।।

128. PRADHANAGNI DHYANAM

Yekananam jatajutam trinetrancha chaturbhujam l
Trisulam parasunchaiva vardanchabhayam kare ll
Vrusharudham cha svetangam nanabharana bhushitam l
Pradhanagnim yajetprajnaha vahnirupamumapathim ll

ஒரு முகத்தையுடையவரும், ஜடையினால் அழகாக விளங்குபவரும், மூன்று கண்கள், நான்கு கைகளை உடையவரும், த்ரிசூலம் பரசு (கோடரி) என்னும் ஆயுதங்களைப் பெற்றிருப்பவரும், வரதமுத்திரை, அபயமுத்திரை இவைகளைக் கைகளில் பெற்றிருப்பவரும், வெண்மையான சரீரத்தையுடையவரும், வ்ருஷப வாஹனத்தில் வீற்றிருப்பவரும், பலவிதமான ஆபரணங்களை உடையவரும், அக்னி ரூபமான உமாபதியாகிய ப்ரதாக்னியை தியானம் செய்யவேண்டும்.

१२९. आहवनीयाग्निध्यानम्

एकाननं त्रिनेत्रं च त्रिमेखलं त्रिपादकम् ।
अक्षमालां त्रिशूलञ्च स्रुजं च दक्षिणे करे ॥
अङ्कुशं चमसं चैव स्रुवञ्च वामहस्तके ।
रक्तवर्णं सुखासीनं पीतवस्त्रेण वेष्टितम् ॥
ध्यायेदाहवनीयाग्निं पूर्वस्यां कुण्डमध्यके ।

129. ஆஹவனீயாக்னி தியானம்

ஏகானனம் த்ரிணேத்ரஞ்சத்ரிமேகலம் த்ரிபாதகம்।
அக்ஷமாலாம் த்ரிசூலஞ்ச ஸ்ருஜஞ்சதக்ஷிணேகரே ॥
அங்குசம் ஸமஸம் சைவ ஸ்ருவம் சவாமஹஸ்தகே।
ரக்தவர்ணம் ஸுகாஸீனம் பீதவஸ்த்ரேண வேஷ்டிதம் ॥
த்யாயேதாஹவநீயாக்னிம் பூர்வஸ்யாம் குண்டமத்யகே ॥

129. AHAVANIYAGNI DHYANAM

Yekananam trinetram cha trimekhalam tripadakam I
Akshamalam trisulancha srujancha dakshinekare II
Ankusam chamasam chaiva sruvancha vamahastake I
Raktavarnam sukhasinam pitavastrena veshtitam II
Dhyayedhavaniyagnim purvasyam kundamadhyake II

ஒருமுகம், மூன்று கண்கள், மூன்று கட்டுகள் மூன்று கால்கள், இவைகளையுடையவரும், வலது கைகளில் ஜபமாலை, த்ரிசூலம், ஸ்ருக் இவைகளைப் பெற்றிருப்பவரும், இடது கைகளில் அங்குசம், சமஸம், ஸ்ருவம் இவைகளைப் பெற்றிருப்பவரும், சிவந்த மேனியையுடையவரும் ஸுகமாக அமர்ந்திருப்பவரும், மஞ்சள் நிறமான ஆடையை உடுத்தியிருப்பவருமான ஆஹவனீயாக்னியை ப்ரதானாக்னிக்குக் கிழக்கு குண்ட மத்தியில் தியானம் செய்யவேண்டும்.

१३०. दक्षिणाग्निध्यानम्

द्विमुखं स्वर्णवर्णाभं त्रिपादं सप्तहस्तकम् ।
हीरसादिसप्तजिह्वं अजारूढं सपात्रकम् ।।
शक्तिस्रुवस्रुजैर्युक्तं परशुतोमरे हस्ते ।
सर्वालङ्कारसंयुक्तं दक्षिणाग्निमथार्चयेत् ।।
(इति)दक्षिणाग्निं हृदिध्यात्वा दक्षिणकुण्ठे आवहयेत् ।।

130. தக்ஷிணாக்னி தியானம்

த்விமுகம் ஸ்வர்ணவர்ணாபம் த்ரிபாதம் ஸப்தஹஸ்தகம் ।
ஹீரஸாதி ஸப்தஜிஹ்வம் அஜாரூடம் ஸபாத்ரகம் ।।
சக்திஸ்ருவஸ்ருஜைர்யுக்தம் பரசுதோமரே ஹஸ்தே ।
ஸர்வாலங்கார ஸம்யுக்தம் தக்ஷிணாக்நி மதார்சயேத் ।।
(இதி) தக்ஷிணாக்னிம் ஹ்ருதித்யாத்வா தக்ஷிணகுண்டே ஆவாஹயேத் ।।

130. DAKSHINAGNI DHYANAM

Dvimukham swarnavarnabham tripadam saptahastakam l
Hirasadi saptajihvam ajarudham sapatrakam ll
Saktisruvasrujairyuktam parasutomare haste l
Sarvalankarasamyuktam dakshinagni matharchayet ll
(ithi)dakshinagnim hrudidhyatva dakshinakunde avahayet ll

இரண்டு முகங்கள், மூன்று கால்கள், ஏழு கைகள், ஹீரஸம் முதலான ஏழு நாக்குகள் இவைகளையுடையவரும், ஸ்வர்ணம்போல் மஞ்சள் நிறமான மேனியையுடையவரும், கைகளில் சக்தி, ஸ்ருக், ஸ்ருவம், பரசு, தோமரம் இவைகளை உடையவரும், நன்கு அலங்கரிக்கப்பட்டவருமான தக்ஷிணாக்னியை ப்ரதானிக்குக் தக்ஷிண குண்டத்தில் தியானம் செய்யவேண்டும்.

१३१. यौवनाग्निध्यानम्

त्रिणेत्रं पञ्चवदनं रक्ताङ्गं दशहस्तकम् ।
शूलं परशुखड्गंचाभयवज्रे च दक्षिणे ॥
टङ्कं पाशाब्जचक्रं च वरदं चैव वामके ।
यौवनाग्निं वृषारूढं नैऋत्यां विन्यसेद्बुधः ॥

131. யௌவனாக்னி தியானம்

த்ரிணேத்ரம் பஞ்சவதனம் ரக்தாங்கம் தசஹஸ்தகம்।
சூலம் பரசுகட்கஞ்ச அபயவஜ்ரே ச தக்ஷிணே ॥
டங்கம் பாசாப்ஜ சக்ரம் ச வரதம் சைவ வாமகே।
யௌவநாக்னிம் வ்ருஷாரூடம் நைர்ருத்யாம் விந்யஸேத்புத: ॥

131. YAUVANAGNI DHYANAM

Trinetram panchavadanam raktangam dasahastakam I
Sulam parasukhadganchabhayavajre cha dakshine II
Tankam pasabjas chakarancha varadanchaiva vamake I
Yauvangnim vrusharudham nairut yam vinyased budhaha II

மூன்று கண்கள், ஐந்து முகங்கள், பத்து கைகள், இவைகளையுடையவரும், சிவந்த மேனியை உடையவரும், சூலம், பரசு,கட்கம், வஜ்ரம், அபயமுத்திரை இவைகளை வலது கைகளிலும் டங்கம், பாசம், தாமரை மலர், சக்ரம், வரதமுத்திரை இவைகளை இடது கைகளிலும் பெற்றிருப்பவரும், வ்ருஷப வாஹனத்தில் வீர்றிருப்பவருமான யௌவநாக்னியை ப்ரதானாக்னிக்கு நிர்ருதி திக்கில் ஸ்தாபித்துத் தியானம் செய்யவேண்டும்.

१३२. गार्हपत्याग्निध्यानम्

रक्ताङ्गं रक्तवर्णास्यं वरदाभयसंयुतम् ।
स्रुक्स्रुवौचोर्ध्वहस्तयोः मुक्ताभरण भूषितम् ।।
सप्तजिह्वासमायुक्तं एकवक्त्रं जटाधरम् ।
अश्वारूढं गार्हपत्यं यजेत् पश्चिमकुण्डके ।।

132. கார்ஹபத்யாக்னி தியானம்

ரக்தாங்கம் ரக்தவர்ணாஸ்யம் வரதாபயஸம்யுதம் ।
ஸ்ருக்ஸ்ருவௌசோர்த்வஹஸ்தயோர் முக்தாபரண பூஷிதம் ॥
ஸப்தஜீஹ்வா ஸமாயுக்தம் ஏகவக்த்ரம் ஜடாதரம் ।
அச்வாரூடம் கார்ஹபத்யம் யஜேத் பச்சிமகுண்டகே ॥

132. GARHAPATYAGNI DHYANAM

Raktangam raktavarnasyam varadabhayasamyutam I
Sruksruvauchordhvahastayoh muktabharanabhushittam II
Saptajihva samayuktam yekavaktram jatadharam I
Asvarudham garhapatyam yajet paschimakundake II

ஒரு முகம், ஏழு நாக்குகள் (ஜ்வாலைகள்) இவைகளையுடையவரும், சிவந்த மேனியையும், சிவந்த வாயையுமுடையவரும், வரத முத்திரை, அபய முத்திரை இவைகளைக் கைகளில் பெற்றிருப்பவரும், ஸ்ருக் ஸ்ருவம் இவைகளை உயரத்தூக்கியிருக்கும் இரு கைகளில் பெற்றிருப்பவரும், முக்தாபரணங்களால் அலங்கரிக்கப் பட்டிருப்பவரும், குதிரையின்மேல் வீற்றிருப்பவருமான கார்கபத்யாக்னிதேவனை ப்ரதானாக்னிக்கு மேற்கு குண்டத்தில் தியானம் செய்யவேண்டும்.

१३३. द्वादशादित्याः

वैकर्तनो विवस्वांश्च मार्ताण्डो भास्करो रविः ।
लोकप्रकाशकस्चैव लोकसाक्षी त्रिविक्रमः ।।

आदित्यश्चैत सूर्यश्च अंशुमाली दिवाकरः ।
एते वै द्वादशादित्याः प्रत्येकं मासगामि नः ।।

133. த்வாதச ஆதித்யா:

வைகர்தநோவிவஸ்வாம்ச்ச மார்தாண்டோ பாஸ்கரோ ரவி:।
லோகப்ரகாசகச்சைவ லோகஸாக்ஷீ த்ரிவிக்ரம: ॥

ஆதித்யச்சைவ ஸூர்யச்ச அம்சுமாலீ திவாகர: ।
ஏதேவைத்வாதசாதித்யா: ப்ரத்யேகம் மாஸகாமின: ॥

133. DVADASAADITYAH

Vaikartano vivaswamscha martando bhaskaro ravihi l
Lokaprakasakaschaiva lokasakshi trivikramaha ll

Adityaschaiva suryascha amsumali divakaraha l
Yetevai dvadasadityah pratyekam masgaminaha ll

1. வைகர்தனன், 2. விவஸ்வாந், 3. மார்தாண்டன், 4. பாஸ்கரன், 5. ரவி, 6. லோகப்ரகாசகன், 7. லோகஸாக்ஷீ, 8. த்ரிவிக்ரமன், 9. ஆதித்யன். 10. ஸூர்யன், 11. அம்சுமாலீ, 12. திவாகரன், ஆக 12 பெயர்களைக் கொண்டவனாக 12 மாதங்களிலும் ஸூர்யன் ஸஞ்சரிக்கின்றான்.

१३४. उषाप्रत्यूषासहितसूर्यध्यानम्

पद्मरागप्रभां सौम्यामेकवक्त्रां द्विनेत्रकाम् ।
वामहस्तधृताम्भोजां भजेद्देवीमुषां सदा ॥
कृष्णवर्णां द्विहस्तां च द्विनेत्रमेकवक्त्रकाम् ।
बिभ्राणामुत्पलं दक्षे प्रत्यूषां भावयेत्सदा ॥
उषाप्रत्यूषके स्वस्य पार्श्वयोर्दक्ष वामयोः ।
कृत्वा यो भासते लोके तं दिनेशमहं भजे ॥

134. உஷாப்ரத்யுஷாஸஹித ஸூர்ய தியானம்

பத்மராகப்ரபாம் ஸௌம்யாமேக வக்த்ராம் த்விநேத்ரகாம் ।
வாமஹஸ்தத்ருதாம்போஜாம் பஜேத்தேவீம் உஷாம்ஸதா ॥
க்ருஷ்ணவர்ணாம் த்விஹஸ்தாம் சத்விநேத்ராம் ஏகவக்த்ரகாம் ।
பிப்ராணாமுத்பலம்தக்ஷே ப்ரத்யூஷாம் பாவயேத்ஸதா ॥
உஷாப்ரத்யூஷகே ஸ்வஸ்ய பார்ச்வயோர் தக்ஷவாமயோ: ।
க்ருத்வா யோ பாஸதே லோகே தம் திநேச மஹம் பஜே ॥

134. USHAPRATUSHITASURYA DHYANAM

Padmaraga prabham saumyam yekavaktram dvinetrakam l
Vamahastadhrutam bhojam bhajeddevim Usham sada ll
Krishnavarnamm dvihastam cha dvinetram yekavaktrakam l
Bibhranamutpalam dakshe pratyusham bhavayet sada ll
Ushapratyshake swasya parsvayordaksha vamayoh l
Krutvayobhasate loke tam dinesamaham bhaje ll

பத்மராகத்தைப் போன்று சிவந்த மேனியையும் உடையவளும், அழகாக இருப்பவளும், ஒரு முகத்தையும், இரண்டு கண்களையும் உடையவளும் இடது கையில் தாமரை மலரை வைத்திருப்பவளுமான உஷாதேவியை எப்பொழுதும் வணங்குகிறேன். கருத்த மேனியை

உடையவளும், ஒரு முகத்தையும் இரண்டு கண்களையும் இரண்டு கைகளையும் உடையவளும், வலது கையில் நீலோத்பல மலரை வைத்திருப்பவளுமான ப்ரத்யுஷாதேவியை எப்பொழுதும் வணங்குகிறேன். உஷாதேவியை வலது பக்கத்திலும், ப்ரத்யுஷாதேவியை இடது பக்கத்திலும் வைத்துக்கொண்டு ப்ரகாசிக்கின்ற தினேசனான ஸெளர்ய பகவானை வணங்குகிறேன்.

नवग्रहध्यानम्

१३५. सूर्यध्यानम्

रक्तवर्णं यौवनञ्च वर्तुलाकारमस्तकम् ।
पङ्कजं हस्तयुग्मे च कर्णयोस्स्वर्णकुण्डलम् ॥
प्रत्यूषावामपार्श्वे च दक्षे गौरी च पद्मिनी ।
नानाभरणसंयुक्तं सूर्यमूर्त्तिमहं भजे ॥

135. ஸெளர்ய தியானம்

ரக்தவர்ணம் யௌவனம் ச வர்துலாகாரமஸ்தகம் ।
பங்கஜம் ஹஸ்தயுக்மே ச கர்ணயோஸ்வர்ண குண்டலம் ॥
ப்ரத்யூஷாவாம பார்ச்வே ச தக்ஷே கௌரீ ச பத்மினீ ।
நாநாபரண ஸம்யுக்தம் ஸெளர்யமூர்த்தி மஹம் பஜே ॥

135. SURYA DHYANAM

Raktavarnam yauvanancha vatulakaramastakam I
Pankajam hastayugme cha karnayossvarkundalams II
Pratyushavamaparsve cha dakshe gauri cha padmini I
Nanabharana samyuktam Suryamurti maham bhaje II

சிவந்த மேனியையுடையவரும், யௌவன வயது உடையவரும், வட்டமான (முகத்தையுடையவரும்) தலையை உடையவரும், இரு கைகளிலும் தாமரை மலரையுடைவரும், ஸ்வர்ண குண்டலங்களைக் காதுகளில்

அணிந்திருப்பவரும், இடது புறத்தில் ப்ரத்யுஷா தேவியையும் வலப்பக்கத்தில் பத்மினியான கௌரியை யுடைவரும், பலவிதமான ஆபரணங்களை உடையருமான ஸூர்யமூர்த்தியை வணங்குகிறேன்.

१३६. चन्द्रध्यानम्

श्वेताङ्गं कम्ररूपं च कोमलाङ्गञ्च यौवनम् ।
शीर्षञ्च वर्तुलाकारं मन्दहास्ययुताननम् ॥
उत्पलं हस्तयुग्मे च सप्तविंशतिलक्षणम् ।
शक्तिलीला समायुक्तं चन्द्ररूपमहं भजे ॥

136. சந்திர தியானம்

ச்வேதாங்கம் கம்ரரூபம் ச கோமளாங்கஞ்ச யௌவனம் ।
சீர்ஷஞ்ச வர்துலாகாரம் மந்தஹாஸயுதானனம் ॥
உத்பலம் ஹஸ்தயுக்மே ச ஸப்தவிம்சதிலக்ஷணம் ।
சக்திலீலாஸமாயுக்தம் சந்த்ரரூபமஹம் பஜே ॥

136. CHANDRA DHYANAM

Svetangam kamrarupam cha komalangancha yauvanam l
Sirshancha vartulakaram mandahasayutananam ll
Utpalam hastayugme cha saptavimsatilakshanam l
Sakti lilasamayuktam Chandrarupa maham bhaje ll

வெண்மையான நிறங்கொண்டவரும், மனங்கவர் உருவத்தையும், அழகான சரீராவயங்களை உடையவரும், யௌவன வயதுடையவரும், வட்டமான தலையை உடையவரும், புன்முறுவலுடன் கூடிய முகத்தை உடையவரும், நீலோத்பல மலரை இரண்டு கைகளிலும் வைத்திருப்பவரும், அச்வினி முதலான இருபத்தேழு நக்ஷத்திரங்களிலும் சஞ்சரிப்பவரும் சக்தி, லீலா என்ற இரு தேவியரையும் இரு புறமும் உடையவருமான சந்திரனை நான் வணங்குகிறேன்.

१३७. अङ्गारकध्यानम्

भूमिजातं रक्तवर्णं खड्गखेटकहस्तकम् ।
रक्तनेत्रं रक्तकेशं भीमञ्च रौद्ररूपकम् ॥

यज्ञसूत्रधरं हारनूपुरादिधरं कुजम् ।
पद्मस्वस्तिकसंयुक्तं भौमरूपं समाश्रयेत् ॥

137. அங்காரக தியானம்

பூமிஜாதம் ரக்தவர்ணம் கட்ககேடக ஹஸ்தகம் ।
ரக்தநேத்ரம் ரக்தகேசம் பீமஞ்ச ரௌத்ரரூபகம் ॥

யக்ஞஸூத்ரதரம் ஹாரநூபுராதிதரம் குஜம் ।
பத்மஸ்வஸ்திகஸம்யுக்தம் பௌமரூபம் ஸமாச்ரயேத் ॥

137. ANGARAKA DHYANAM

Bhumijatam raktavarnam khadgaketaka hastakam I
Raktanetram raktakesam bhimancha raudrarupakam II

Yagnasutra dharam hara nupuradidharam kujam I
Padmaswastika samyuktam bhaumarupam samasrayet II

பூமியின் மைந்தனும், சிவந்த மேனியையும், சிவந்த கண்களையும், சிவந்த கூந்தலையும் உடையவரும், கத்தி, கேடயம் இவைகளைக் கையில் கொண்டிருப்பவரும், யக்ஞோபவீதத்தை அணிந்திருப்பவரும், கழுத்தில் மாலையையும் கால்களில் நூபுரம் (கொலுசு) முதலான ஆபரணங்களையும் அணிந்திருப்பவரும், குஜன் என்றழைக்கப்படுகின்றவரும், தாமரைமலர் ஸ்வஸ்திகம் என்ற சின்னங்களை உடையவருமான பௌமனை (அங்காரகனை) வணங்கவேண்டும்.

१३८. बुधध्यानम्

पीतवस्त्र पीतगात्र पीतमाल्य खड्गधृत् ।
सिंहवाहसौम्यरूप चन्द्ररोहिणी सुत ।
प्राङ्मुखेषुमण्डलप्रहृष्टहृच्चतुर्भुज
हस्तशोभि पुस्तकग्रहेश पाहि मां बुध ॥

138. புத தியானம்

பீதவஸ்த்ர பீதகாத்ர பீதமால்ய கட்கத்ருத்
ஸிம்ஹவாஹ ஸெளம்யரூப சந்த்ரரோகிணீஸுத।
ப்ராங்முகேஷு மண்டலப்ருஹ்ருஷ்டஹ்ருச்சதுர்புஜ
ஹஸ்தசோபி புஸ்தகக்ரஹேச பாகிமாம் புத॥

138. BHUDHA DHYANAM

Pitavastra pitagatra pitamalya khadgadhrt
Simhavaha saumyarupa chandrarohinisuta I
Prangmukheshu mandalaprahrushtahrucchaturbhuja
Hasstasobhi pustakagrahesa pahimam budha II

நான்கு கைகளையும், மஞ்சள் நிறமான சரீரத்தையும், மஞ்சள் நிறமான வஸ்திரங்களையும், மஞ்சள் நிறமான மாலையையும் உடையவராகவும், ஒரு கையில் கத்தியையும் மற்றொரு கையில் புஸ்த்தகத்தையும் உடையவராகவும், சாந்தஸ்வரூபியாகவும், ஸிம்ஹ வாஹனத்தையுடைய வராகவும், கிழக்கு முகமாக பாணாசனத்தில் வீற்றிருப்பவராகவும் மிக்க மகிழ்ச்சி உடையவராகவும் இருக்கிற ரோகிணீ சந்திரன் இவர்களின் புத்திரனுமான ஏ புதக்ரஹ ஈசனே என்னைக் காப்பாற்றும்.

१३९. बृहस्पतिध्यानम्

स्वर्णवर्णसौम्यरूप दण्डहस्तदक्षिणम्
कुण्डिकाक्षवामहस्तस्मेरचाप सुस्थितम् ।
पीतवस्त्रसुन्दराङ्ग दिव्यरूपतेजसं
ब्रह्मवंशदीपकञ्च देवदेशिकं भजेत् ॥

139. பிருஹஸ்பதி தியானம்

ஸ்வர்ணவர்ண ஸௌம்யருப தண்டஹஸ்ததக்ஷிணம்
குண்டிகாக்ஷவாமஹஸ்தஸ்மேரசாப ஸுஸ்திதம்।
பீதவஸ்த்ர ஸுந்தராங்க திவ்யருப தேஜஸம்
ப்ரும்மவம்சதீபகஞ்ச தேவதேசிகம் பஜேத் ॥

139. BRUHASPATI DHYANAM

Swarnavarna saumyarupadandahastadakshinam
Kundikaksha vamahastamerachapa susthitam l
Pitavastra sundarangadivyarupatejasam
Brahmavamsadipakancha devdesikam bhajet ll

ஸ்வர்ணத்தைப்போல் மஞ்சள் நிறமாக இருப்பவரும், சாந்தஸ்வருபியாகவும், வலது கையில் தண்டத்தையும் இடது கையில் கமண்டலு, ருத்ராக்ஷமாலை இவைகளையுடைய வரும், அழகான வில்லாகிற ஆசனத்தில் அமர்ந்திருப்ப வரும், மஞ்சள் நிறமான ஆடையை உடுத்தியிருப்பவரும், அழகான திருமேனியை உடையவரும், மிகவும் பிரகாசிக்கின்றவரும், பிராமணவம்சத்திற் பிறந்தவரும் தேவர்கட்கெல்லாம் குருவுமான பிருஹஸ்பதியை வணங்கவேண்டும்.

१४०. शुक्रध्यानम्

शुभ्रवस्त्रशुभ्रदेह शुक्लमाल्य भार्गव
दण्डकुण्डिका धृताक्षमालिका करेष्टद ।
दैत्यसद्गुरो कवे जटाधरैकनेत्रक
नीतिशास्त्रवक्तृ शुक्र पाहि मां शुभप्रद ॥

140. சுக்ர தியானம்

சுப்ரவஸ்த்ரசுப்ரதேஹ சுக்லமால்ய பார்கவ
தண்டகுண்டிகாத்ருதாக்ஷமாலிகாகரேஷ்டத ।
தைத்யஸத்ருரோகவே ஜடாதரைகநேத்ரக
நீதிசாஸ்த்ரவக்த்ரு சுக்ரபாஹி மாம் சுபப்ரத ॥

140. SUKRA DHYANAM

Subhravastra subhradeha suklamalya bhargava
Dandakundika drutakshamalika kareshtada I
Daitya satguro kave jatadharaika netraka
Nitisastra vaktru sukra pahi mam subhaprada II

ஒரு கண்ணை மட்டில் கொண்டவரும், ஜடையைத் தரித்திருப்பவரும், வெண்மையான சரீரத்தையும், வெண்மையான ஆடையையும், மாலையயும், அணிந்திருப் பவரும், ப்ருகு வம்சத்தில் தோன்றியவரும், தண்டம், கமண்டலு, ஜபமாலை இவைகளைக் கைகளில் பெற்றிருப்பவரும், அசுரர்களுக்கு குருவாக இருப்பவரும், நீதி சாஸ்த்தரத்தை சொன்னவரும், சுபத்தையும் வேண்டியதைக் கொடுப்பவருமான ஏ சுக்கிர பகவானே என்னைக் காப்பாற்றும்.

१४१. शनैश्चरध्यानम्

कृष्णवर्ण भीमरूप गृध्रवाह वामन
खड्गशूल चापहस्त शान्तहृच्चतुर्भुज ।
पङ्गुपादसूर्यपुत्र नीलभूष क्रूरदृक्
कालसोदर प्रकोप पाहि मां शनैश्चर ॥

141. சனைச்சர தியானம்

க்ருஷ்ணவர்ண பீமரூப க்ருத்ரவாஹ வாமந
கட்கசூலசாபஹஸ்தசாந்தஹ்ருச்சதுர்புஜ ।
பங்குபாத ஸூர்யபுத்ர நீலபூஷ க்ரூரத்ருக்
காலஸோதர ப்ரகோப பாஹிமாம் சனைச்சர ॥

141. SANAICHARA DHYANAM

Krushnavarna bhimarupa grudhravaha vamana
khadgasula chapahast santahrucchaturbhuja l
Pangupadasuryyyaputra nilabhusha kruradhruk
kalasodara prakopa pahimam sanaichara ll

நான்கு கைகளையும், முடமான கால்களையும், கருப்பான மேனியையும் பயங்கரமான உருவத்தையும் க்ரூரமான பார்வையையும் சாந்தமான ஹ்ருதயத்தையும் உடையவரும், கழுகு வாஹனத்தில் வீற்றிருப்பவபரும், குட்டையாக (குள்ளமாக) இருப்பவரும், கத்தி, சூலம், வில் இவைகளைக் கையில் பெற்றிருப்பவரும், நீலநிறமான ஆபரணங்களைப் பூண்டிருப்பவரும், காலனுடைய சகோதரனும், மிக்க கோபமுடையவரும், ஸூர்யனின் புத்திரனுமான ஏ சனைச்சரனே என்னைக் காப்பாற்றும்.

१४२. राहुध्यानम्

नीलवस्त्र धूम्रवर्ण नीलभूषणप्रिय
खड्गशूल [1]चर्महस्त चन्द्रसूर्य पीडक ।
छागवाह दैत्यराज दुष्टकृच्चतुर्भुज
सिंहिकातनूज पाहि राहुदेव सर्वदा ।।

142. ராகு தியானம்

நீலவஸ்த்ர தூம்ரவர்ண நீலபூஷணப்ரிய
கட்கசூல சர்மஹஸ்த சந்த்ரஸூர்ய பீடக।
சாகவாஹ தைத்யராஜ துஷ்டக்ருச்சதுர்புஜ
ஸிம்ஹிகாதனூஜ பாஹி ராகு தேவ ஸர்வதா ।।

142. RAHU DHYANAM

Nilavastra dhumravarna nilabhusana priya
Khadgasula charmahasta chandrasurya pidaka I
Chagavaha daityaraja dushtakrucchatur bhuja
Simhikatanuja pahi Rahudeva sarvada II

நான்கு கைகளையும், புகையின் நிறம் கொண்ட மேனியை உடையவரும், நீலநிறமான ஆடை, ஆபரணம் இவைகளையுடையவரும், கத்தி, சூலம், கேடயம் இவைகளைக் கைகளில் பெற்றிருப்பவரும், சூரியன், சந்திரன் இவர்களுக்குப் பீடையைச் செய்கிறவரும் ஆட்டுக்கடா வாகனத்தையுடையவரும், அசுரர்களுக்கு அரசனாகவும், மற்றவர்கட்கு துன்பத்தைக் கொடுப்பவரும் ஸிம்ஹிகையின் புதல்வனுமான ஏ ராகு தேவனே என்னை எப்பொழுதும் காப்பாற்றும்.

---

१. चर्म – கேடயம், தோல் என்ற இரு பொருளிலும் வழங்கப்படுகிறது.

१४३. केतुध्यानम्

चित्रवर्ण चित्रगन्ध चित्रमाल्य शोभित
हे ! कपोतवाहन ध्वजाकृते करद्वय ।
दक्षिण करे गदां च वामके वरं धरं
केतु देव पाहि मां रवीन्दुपीडनोत्सुक ॥

143. கேது தியானம்

சித்ரவர்ண சித்ரகந்த சித்ரமால்ய சோபித
ஹே ! கபோத வாஹநத்வஜாக்ருதே கரத்வய ।
தக்ஷிணே கரே கதாம் ச வாமகே வரம் தரம்
கேதுதேவ பாஹி மாம் ரவீந்துபீடநோத்ஸுக ॥

143. KETU DHYANAM

Chitravarn chitragandha chitramalya sobhita
He ! kapotavahana dhvajakrute karadvaya I
Dakshine kare gadam cha vamake varam dharam
Ketudeva pahimam ravindupidoanotsuka II

நானாவிதமான வர்ணங்களையுடைய மேனியை உடையவரும், பலவிதமான வாசனையுடைய மலர்களாலான மாலையையுடையவரும், புறாவை வாஹனமாகக் கொண்டவரும், த்வஜம் போன்ற ஆக்ருதியையுடையவரும், இரண்டு கைகளையுடையவரும், வலது கையில் கதையையும், இடது கையில் வரத முத்திரையையும் பெற்றிருப்பவரும் சூரிய சந்திரர்களுக்குப் பீடையைக் கொடுப்பவருமான கேதுதேவனே என்னைக் காப்பாற்றும்.

1. குறிப்பு : நவக்ரஹங்களுக்கு வாகனங்களைக் கூறுமிடத்து, சோதிட நூலில் சூரியனுக்கு ரதமும், சந்திரனுக்கு முத்து விமானமும் (ரதம்) செவ்வாய்க்கு அன்னமும், புதனுக்கு குதிரையும், குருவுக்கு யானையும், சுக்ரனுக்கு கருடனும், சனிக்குக் காகமும் ராகுவுக்கு ஆடும், கேதுவுக்கு சிங்கமும் கூறப்பட்டிருக்கிறது. சாந்திரத்னாகரம் போன்ற நூல்களில் மாறுதல் காணப்படுகின்றன. செவ்வாய்க்கு ஆடு, புதனுக்கு ஸிம்ஹமும், குருவுக்கும் சுக்ரனுக்கும் ரதமும், சனிக்கு காகமும், ராகுவுக்கு சிங்கமும், கேதுவுக்கு கழுகும் கூறப்பட்டிருக்கிறது. இந்நூலில் கேதுவுக்கு புறா கூறப்பட்டிருப்பது. கவனத்திற்குரியது.

पञ्चकालीध्यानम्

१४४. उग्रकालीध्यानम्

एकवक्त्रां उग्रदंष्ट्रां शिखिज्वालशिखां शुभाम् ।
श्यामाङ्गीं रक्तवस्त्रां तां द्वात्रिंशत्भुजशोभिनीम् ।।

दक्षे वेत्रासिवेतालशूलखड्गशराङ्कुशाः ।
कुठारक्षुरिकाखेटढक्का भ्रमरशक्तयः ।।

वामे कपालदहनघण्टापाशैणडिण्डिमाः ।
शंखाऽहि चापमुसल भिण्डी लाङ्गलगेन्दुका ।।

सर्वालङ्कार संयुक्तां सर्वाभरण भूषिताम् ।
सुरासुरस्तोमवन्द्यामुग्रकालीं नमाम्यहम् ।।

144. உக்ரகாளீ தியானம்

ஏகவக்த்ராம் உக்ரதம்ஷ்ட்ராம் சிகிஜ்வாலசிகாம் சுபாம் ।
ச்யாமாங்கீம் ரக்தவஸ்த்ராம் தாம் த்வாத்ரிசத்புஜ சோபினீம் ॥

தக்ஷே வேத்ராஸிவே தாளசூலகட்க சராங்குசா: ।
குடாரக்ஷுரிகாகேட டக்கா ப்மர சக்தய: ॥

வாமே கபாலதஹன கண்டாபாசைணடிண்டமா: ।
சங்காஹிசாபமுஸல பிண்டீலாங்கலகேந்துகா: ॥

ஸர்வாலங்காரஸம்யுக்தாம் ஸர்வாபரணபூஷிதாம் ।
ஸுராஸுர ஸ்தோமவந்த்யாம் உக்ரகாளீம் நமாம்யஹம் ॥

144. UGRAKALI DHYANAM

Yekavaktram ugradamhtram sikhivalasikham subham l
Syamangim raktavastram tam dvatrimsatbhuja sobhinim ll

Dakhe vetrasi vetalasula khadgasarankusaha l
Kutharakshikaketa dakkabhramarasaktayah ll
Vame kapala dahana ghantapasaina dindimaha l
Sankhahichapamusala bhindi langala gendukaha ll
Sarvalankara samyuktam sarvabharana bhushitam l
Surasurastoma vandyamugrakali namamyaham ll

ஒரு முகம், முப்பத்திரண்டு கைகளையுமுடையவளும், பயங்கரமான கோரைப்பற்களை உடையவளும், ஜ்வாலைகளை உடைய நெருப்பை சிகையாக உடையவளும், கருமை நிறங்கொண்ட மேனியை உடையவளும், சிவப்பு ஆடையை உடையவளும், நன்மையைச் செய்பவளும், வலது கைகளில், பிரம்பு, கத்தி, வேதாளம், சூலம், வாள், அம்பு, அங்குசம், கோடாரி, சிறிய கத்தி, கேடயம், உடுக்கை, வண்டு, சக்தி முதலான வைகளையும், இடது கைகளில் கபாலம், நெருப்பு, மணி, பாசக்கயிறு, மான், டிண்டிமம், சங்கம், பாம்பு, வில், உலக்கை, பிண்டீ, கலப்பை முதலான ஆயுதங்களை வைத்திருப்பவளும், நன்கு ஆபரணங்கள் யாவற்றாலும் அலங்கரிக்கப்பட்டு இருப்பவளும், தேவர்கள், அசுரர்கள் எல்லோராலும் வணங்கப்பட்டவளுமான உக்ரகாளியை வணங்குகிறேன்.

१४७. निग्रहकालीध्यानम्

एकास्यामग्निज्वालोग्रामायताक्षीं भयंकराम् ।
क्रूरदंष्ट्रां रक्तमाल्यां अष्टादशभुजान्विताम् ॥
भयावहां चित्रवस्त्रां शिरोमालाविभूषिताम् ।
तुङ्गस्तनभरां नम्रां गर्जन्तीं समराङ्गणे ॥
सव्ये घण्टेषुमुसलचक्रवज्रासयः करे ।
कपालनाग क्षुरिका शङ्खखेटाङ्कुशाः परे ॥
शरसनकरां भीमां धृतभेतालविग्रहाम् ।
चामुण्डामुग्ररूपां तां भजे निग्रकालिकाम् ॥

145. நிக்ரஹகாளீ தியானம்

ஏகாஸ்யாமக்நிஜ்வாலோக்ராமாயதாக்ஷீம் பயங்கராம்।
க்ரூரதம்ஷ்ட்ராம் ரக்தமால்யாம் அஷ்டாதசபுஜாந்விதாம்॥
பயாவஹாம் சித்ரவஸ்த்ராம் சிரோமாலாவிபூஷிதாம்।
துங்கஸ்தநபராம் நம்ராம் கர்ஜந்திம் ஸமராங்கணே॥
ஸவ்யே கண்டேஷு முஸலசக்ரவஜ்ராஸய:கரே।
கபாலநாகக்ஷுரிகாசங்ககேடாங்குசா:பரே॥
சராஸநகராம் பீமாம் த்ருத பேதாள விக்ரஹாம்।
சாமுண்டாமுக்ரரூபாம் தாம் பஜே நிக்ரஹகாலிகாம்॥

145. NIGRAHAKALI DHYANAM

Yekasyamagnjwalogra mayatakshim bhayankaram I
Kruradamshtram raktamalyam ashtadasabhujanvitam II
Bhayavaham chitravastram siromalavi bhushitam I
Tungastanabharam namram garjantim samarangane II
Savye ganteshu musala chakravajrasayah kare I
Kapalanaga kshurika sankhakhetankusah pare II
Sarasanakaram bhimam dhrubhetala vigraham I
Chamundamugrarupam tam bhaje nigrahakalikam II

ஒரு முகமும் (சிரஸின் இருபுறமும்) அக்னி ஜ்வாலையையுமுடையவளும், நீண்ட விசாலமான கண்களையுடையவளும், பயங்கரமான தோற்றத்தை உடையவளும், கொடூரமான நீண்ட கோரைப் பற்களை யுடையவளும், சிவந்த (மலர்களாலான) மாலையை உடையவளும், பதினெட்டு கைகளையுடையவளும், பார்ப்பவர்களுக்குப் பயத்தை உண்டு பண்ணுபவளும் பலநிறப்பட்ட வர்ணங்களையுடைய ஆடையை உடுத்தி யிருப்பவளும் தலை முண்டங்களை மாலையாக அணிந் திருப்பவளும், பருத்த ஸ்தநபாரங்களையுடையவளும், கொஞ்சம் வளைந்தாற்போல் இருப்பவளும், (அசுரர்களை எதிர்க்கும்பொழுது) யுத்த களத்தில் கர்ஜிக்கின்றவளும், இடது கைகளில் மணி, வில், உலக்கை, சக்ரம், வஜ்ராயுதம்,

கத்தி இவைகளையும், வலது கைகளில் மண்டை ஓடு, பாம்பு, சிறிய கத்தி, சங்கம், கேடயம், அங்குசம், அம்பு, பேதாளம் இவைகளைப் பெற்றிருப்பவளும், உக்ரமான உருவத்தையுடைய சாமுண்டா என்கிற காளியை வணங்குகிறேன்.

१४६. अनुग्रहकालीध्यानम्

दंष्ट्राकरालवदनां त्रिणेत्राञ्च चतुर्भुजाम् ।
ऊर्ध्वोन्नद्धसुकेशां तां नीलवर्णां ज्वालाच्छिखाम् ॥
कपालपाशढक्कोग्रशूल हेतिधरां शुभाम् ।
वराभयकरां शान्तां भजेऽनुग्रहकालिकाम् ॥

146. அனுக்ரஹ காளீ தியானம்

தம்ஷ்ட்ராகராளவதனாம் த்ரிணேத்ராஞ்ச சதுர்புஜாம்!
உர்த்வோந்நத்த ஸுகேசாம் தாம் நீலவர்ணாம் ஜ்வலச்சிகாம்॥
கபாலபாசடக்கோக்ரசூலஹேதிதராம் சுபாம்॥
வராபயகராம் சாந்தாம் பஜே (அ)னுக்ரஹகாளிகாம்॥

146. ANUGRAHAKALI DHYANAM

Damshtrakaralavadanam trinetrancha chaturbhujam l
Urdhvonnaddhasukesam tam nilavarnam jvalacchikham ll
Kapalapasadhakkograsulaheti dharam subham l
Varabhayakaram santam bhaje anugrahakalikam ll

கோரைப் பற்களையுடையவளும், பயங்கரமான முகத்தையுடையவளும், மூன்று கண்களையும் நான்கு கைகளையுமுடையவளும், உயரத்தூக்கி முடியப்பட்ட அழகான கூந்தலையுடையவளும், கருமைநிறங் கொண்டவளும், (அக்னியினால்) ஜ்வலிக்கின்ற சிகையை உடையவளும், கபாலம், பாசம், உடுக்கை, பயங்கரமான

